ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2005/20 - 2017 පෙබරවාරි මස 08 වැනි බදාදා - 2017.02.08

2005/20 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு இரத்மலானை - மொரட்டுவை கழிவுநீர் மீள் சுழற்சி கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் 07 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழே அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, சனவரி 27.

5/2/2/1262

#### அட்டவணை

கொழும்பு மாவட்டத்தில், மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 551, கடுபெத்த கிராம அலுவலர் பிரிவில் கடுபெத்த கிராமத்தில் அமைந்துள்ள கம்மெத்த குபுர என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து 25 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கிற்கு: கம்மெத்த குபுர காணியின் ஒரு பகுதி; கிழக்கிற்கு: தீப எல; தெற்கிற்கு: கடுபெத்தையில் இருந்து பிலியன்தலை வரையான பண்டாரநாயக மாவத்தை; மேற்கிற்கு: வரைபட இலக்கம் 2354 இன் A1 காணித் துண்டு.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும்: திருமதி. விமலா விஜேதுங்க, இல.: 77, 'சிரிமல்', பண்டார நாயக மாவத்தை, கடுபெத்த - மொரட்டுவை.

2-876

---

### 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம்,

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு மாத்தறை IV ஆம் கட்ட நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் மிரிஸ்ஸவத்த நிலக்கீழ் நீர்த்தேக்கம், நீர் தாங்கிக் கோபுரம், நீர் இறைக்கும் இயந்திரசாலை மற்றும் நிலையப் பொறுப் பதிகாரிக்கான உத்தியோகபூர்வ விடுதி ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழே அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப் பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்ளும் கட்டளையினுடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, சனவரி 27.

5/2/2/1262

**அட்டவணை**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில், பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 375 நாகுலுகமுவ வடக்கு கிராம அலுவலர் பிரிவில் நாகுலுகமுவ சியபலாகஸ்ஆர கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. ஞானசிரி தஹநாயக அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2014/025 ஆம் இலக்க வரைபடத்தில் இலக்கம் 4A என சுட்டிக்காட்டப்பட்டுள்ள கொஸ்வத்த அல்லது சியபலாகஸ்ஆர தங்கஹவத்த அல்லது சித்தியா கேவத்த என்றழைக்கப்படுகின்ற காணியில் சுமார் 0.2023 ஹெக்டயார் (றூட் :02) விஸ்தீரணத்தை யுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமையப்பெற்றுள்ள காணிப்பகுதி.

வடக்கிற்கு: வரைபட இலக்கம் 203 இன் துண்டிலக்கம் 1 மற்றும் 2; கிழக்கிற்கு: இந்த காணியின் 3 ஆம்இலக்க காணித்துண்டு (6 மீற்றர் அகலம் உள்ள உட்செல்லும் வழி); தெற்கிற்கு: இலக்கம் 2014/025 வரைபடத்தில் துண்டு இலக்கம் 4B காணி; மேற்கிற்கு: வரைபடத்தில் இலக்கம் 42 இன் 2 ஆம் துண்டிலக்க காணியின் ஒரு பகுதி.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும்: திரு. திஸ்ஸ வீரதுங்க, வீரசெவன, கலகம ஹந்திய, நாகுலு கமுவ.

2-877

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.